# கல்வி உளவியல்

## மானுடவியல் கற்றல் கோட்பாடு

Mr K.Sivakumar
Lecturer
National College of Education
Vavuniya

# ரொஜர்ஸின் மானுடவியல் கொள்கை

இக் கொள்கை கார்ள் ரொஜர்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்டது. கற்றலானது ஒருவரின் நாளாந்த வாழ்க்கையின் தொடர்ச்சியான ஒரு செயன்முறையாகும் என அவர் விளக்குகிறார். கற்றலில் நுண்மதியும் மனவெழுச்சியும் சம அளவில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய அம்சங்கள் என குறிப்பிடுகிறார். கற்றலின் இறுதி விளைவு, அறிதல் மற்றும் மனவெழுச்சி ஆகிய இரண்டு ஆட்சிகளிலும் வளர்ச்சியாகும் எனக் குறிப்பிடுகிறார்.

கற்றலை “அறிகைக் கற்றல்” என்றும் “விளைவீட்டற் கற்றல்” என்றும் இவர் பாகுபடுத்தி நோக்கினார். அறிவு பயன்படுத்தப்படாவிடில் அறிகைக் கற்றலால் எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. ஆனால் விளைவீட்டற் கற்றலோ தனித்துவமானதும் பயன் விளைவிக்கவல்லதுமாகும். ஒருவருடைய முன்னேற்றத்திலும், நலன்களிலும் நேரடியாகப் பங்கு கொள்வதுதான் விளைவீட்டற் கற்றலாகும்.

இது கற்பவர்களை மையமாகக் கொண்டது. கற்பவர்களின் தேவைகளும், நலன்களும், விளைவீட்டற் கற்றலிலே குவியப்படுத்தப்படுகின்றன. விளைவுக் கற்றலானது அனுபவங்களுடனும், உற்றுநோக்கலுடனும் தொடர்புடைய விளைவை ஈட்டிநிற்கும், இக் கற்றல் சிறப்புப் பண்புகளைக் கொண்டது.

1. கற்பவர்களின் தனியாள் ஈடுபாட்டை இது முழு அளவிலே உள்ளடக்கி இயக்கப்படுகின்றது.
2. கற்போரால் கற்றற் செயற்பாடு தானாகத் தோற்றுவித்துத் தொடங்கப்படுகிறது.
3. இக்கற்றல் தன்னிலை மதிப்பீடுகளை உள்ளடக்கி நிற்கின்றது.
4. கற்கப்பட்ட ஆற்றல்களும் திறன்களும் எங்கு பயன்படுத்தப்படல் வேண்டுமோ அங்கங்கெல்லாம் பயன்படுத்துவதற்குரிய முழுநிலை ஊடுருவல் விளைவை இது வழங்குகின்றது.

# கற்றலை ஒழுங்கமைத்தல்

1. கற்பதற்குரிய நேர்ப்பாங்கானதும் சாதகமானதுமான கவிநிலையை ஏற்படுத்திக் கொடுத்தல்.
2. கற்றலுக்குரிய இலக்குகளைத் தெளிவான முறையில் கற்பவர்களிடத்து எடுத்துக் கூறுதல்.
3. கற்றல் வளங்களை ஒழுங்கமைப்பதுடன், கற்பவர்களுக்கு அவற்றைக் கிடைக்கச் செய்தல்.
4. கற்றலிலே நுண்மதிக் கூறுகளையும் மனவெழுச்சிக் கூறுகளையும் சமநிலைப்படுத்துதல்.
5. மக்களாட்சிப் பாங்கில் கற்பவர்களின் சிந்தனைகளோடும் உணர்ச்சிகளோடும் கலந்து கொள்ளல்.

# கற்றலுக்கு வசதியளிப்பவராக ஆசிரியர்

1. கற்பவரின் தன்னிலைக்கு பயமுறுத்தல் இருத்தலாகாது.
2. வளங்களும், கவிநிலையும் கற்பதற்குச் சாதகமாக இருத்தல் வேண்டும்.
3. கற்பவர் கற்றல் செயன்முறையில் முழுநிறைவாகப் பங்கேற்பதுடன், அதன் இயல்பிலும் செல்திசையிலும் கட்டுப்பாடு மேற்கொள்ளத்தக்க நிலையில் இருத்தல் அவசியமாகின்றது.
4. நடைமுறைகள், சமூகப்பரப்பு, தனியாள் பரப்பு, ஆய்வுப் பரப்பு முதலியவற்றுடன் நேரடியாக ஊடுருவி மோதக்கூடிய நிலையிலே கற்றல் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.
5. முன்னேற்றமும், வெற்றியும் தொடர்பாக மாணவர்கள் தம்மைத்தாமே மதிப்பீடு செய்யக்கூடியவாறு கணிப்பீட்டு முறைகள் முன்னெடுக்கப்படல் அவசியமாகின்றது.
6. கற்றலின் முக்கியத்துவத்தைக் கற்பவர்கள் அறிந்து கொள்வதுடன் கற்றலில் விருப்பையும், திறந்த மனப்பாங்கையும் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது.

மனிதரின் உள்ளார்ந்த ஆற்றலிலும், வலுவிலும் ரொஜர்ஸ் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார். கற்பதற்கும் முன்னேற்றத்தை நோக்கி நகர்வதற்கும் மனிதர்களிடத்து உள்ளார்ந்த ஆற்றல்வளம் காணப்படுகின்றது. தனியாள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமுரிய குணவியல்புகளின் புதையல்கள் ஒவ்வொருவரிடத்தும் காணப்படுதலை அறிந்தும் அங்கீகரித்தும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவுதல் வேண்டும் பெற்றோரும் தமது பணிகளை இந்த அடிப்படைகளில் மேற்கொள்ளல் வேண்டும்.

இங்கு ஆசிரியர் தனியே அறிவுறுத்தல் வழங்குபவராக அன்றி உதவி புரிபவராகச் செயற்பட வேண்டும். மாணவருக்கு கற்றல் சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுத்து, அவற்றின் மூலம் தேடலுக்கு வழிப்படுத்தி அதன் மூலம் புதிய விழுமியங்களையும் சுய எண்ணக்கருவையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்குச் சந்தர்ப்பமளித்தல் வேண்டும். கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது மாணவரின் இயல்பூக்கங்கள், விருப்பு வெறுப்புகள், உணர்வுகள், மனவெழுச்சிகள், மற்றும் ஊக்கலின்பால் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

# ஆபிரஹாம் மாஸ்லோ

மானுடவியல் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் மாஸ்லோ, மானுடத் தேவைகள் நிறைவு பெறுவதால், கற்றலுக்குத் தேவையான உள ஆயத்த நிலையும் உடல் ரீதியான ஆயத்தநிலையும் ஏற்படுவதாக எடுத்துக்காட்டுகின்றார். மாஸ்லோ, மனிதத் தேவைகளை அடுக்கமைப்பின்படி விவரித்துள்ளார்.

இத்தேவைகள் நிறைவு பெறுவதால், கற்றலுக்குத் தேவையான உள உடல் ஆயத்தமிக்க ஊக்கலும் ஏற்படும். அதனூடாக கற்றல் எனும் சிக்கலான செயன்முறை இலகுபடுத்தப்படும் எனவும் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

கற்க வேண்டியவற்றை அவ்வாறு கற்பவருக்குப் பயனுடையவையாக ஒழுங்குபடுத்தல் அவசியமாகும் என மானுடவியலாளர்கள் எடுத்துக் காட்டினர். கற்றலுக்காகக் கற்றல் மாற்றங்களுக்கு இசைவடைதல், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல் ஆகியவற்றை அவர் பிரதான கருத்துக்களாக முன்வைத்தார்.

# மாஸ்லோவின் படிநிலைத் தேவைகள்



# மானுடவியல் கொள்கையின் கல்விப் பயன்பாடு

1. கட்டுப்பாடற்ற வகுப்பறை முகாமையொன்றின் கீழ் தமக்கேயுரிய வேகத்தில் கற்றலுக்கு இடமளித்தலும், அதற்கமைய வகுப்பறைச் சூழலை ஒழுங்கமைத்தலும் அவசியமானவையாகும்.
2. மாணவர் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட விரும்புகின்றனர் எனக் கண்டறிந்து அதற்கேற்ப கற்றல் கற்பித்தல் அனுபவங்களைத் திட்டமிட்டு வழங்குதல்.
3. ஆசிரியர் தமது மாணவருக்கு கற்க உதவி புரிபவராகச் செயற்பட வேண்டும். மாணவரது கற்றலுக்குத் தேவையான வளங்களை வழங்குதல் வேண்டும்.
4. கற்றல் நோக்கங்களையும், கற்றல் வகைகளையும் மதிப்பீட்டு முறைகளையும் தாமே வகுத்துக் கொள்வதற்கு மாணவரை வழிப்படுத்துதல் வேண்டும்.
5. சுய மதிப்பீட்டின்பால் மாணவரை வழிப்படுத்தலும் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை அடையும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைத்தலும்.


THANK YOU